before the Hon'ble Court of Chief Judicial Magistrate / Special Court Ramanathapuram

**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051810

1. District : மாவட்டம் Ramanathapuram PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 1/2022 Date: நாள் 19.01.2022

2. (i) Act சட்டம்: P.C.Act 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 1988 ஊழல் தடுப்புச் சட்டம் 2018, சட்டத்தின்
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(a)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : 409, 465, 468, 471, 477(A)

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 2018-2019 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19.01.2022 Time நேரம் 12.30 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தொகுதி - I

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் [handwritten, partly illegible: திண்ணவெங்கள் பஞ்சாயத்து அலுவலகம், திருப்புல்லாணி ஒன்றியம் ...]
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் மு. ரமேஷ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. சித்தம்பரம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 20.08.197[illegible] (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு இராமநாதபுரம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது
திரு. கே. பாலகிருஷ்ணன் S/o கருப்பையா, ஊராட்சி செயலர், திண்ணவெங்கள் பஞ்சாயத்து, திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், இராமநாதபுரம் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant/ Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன்:-

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு விழிப்பு அறிக்கை எண் 03/2019ன் தொடர்ச்சியாக இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்களின் குறிப்பாணை எண் 28435 /2019/RDP/RM நாள் 27.09.2021 ன்படி காலம் 7ல் கண்ட எதிரி மீது குற்ற எண் 01/2022 ஊழல் தடுப்பு சட்டம், 1988 சட்டப்பிரிவுகள் **13 (2) r/w 13 (1) (c)**, 1988 ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 சட்டப்பிரிவுகள் **13 (2) r/w 13 (1) (a)** மற்றும் 409, 465, 468, 471, 477(A) இந்திய தண்டனை சட்டத்தின்படி 19.01.2022 ஆம் தேதி 12.30 மணிக்கு பதிவு செய்யப்பட்ட வழக்கின் குற்ற விவரமானது, திரு.கே.பாலகிருஷ்ணன் என்பவர் கடந்த 24.05.2012 ஆம் தேதி முதல் 05.02.019ஆம் தேதி வரை இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியததின் தில்லையேந்தல் ஊராட்சியில் ஊராட்சி செயலாளராக

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் [illegible] பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அதிகாரியின் ஒப்பம்
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Ramanathapuram
Name: பெயர் கு. குமரேசன்
Rank: நிலை காவல் ஆய்வாளர்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

19.01.2022 at 13.30 Hrs

**இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 01/2022 பிரிவு ஊழல் தடுப்பு சட்டம், 1988 சட்டப்பிரிவுகள் 13 (2) r/w 13 (1) (c), 1988 ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 சட்டப்பிரிவுகள் 13 (2) r/w 13 (1) (a) மற்றும் 409, 465, 468, 471, 477(A) இதச தொடர்ச்சி:**

பணிபுரிந்துள்ளார். இவர் ஊழல் தடுப்பு சட்டம் 1988, ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம், 2018 சட்டப்பிரிவு **(2) (c)** ன்படி பொது ஊழியர் ஆவார். தில்லையேந்தல் ஊராட்சி செயலாளர் பாலகிருஷ்ணன் என்பவரது பணியானது ஊராட்சிக்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து ஆண்டுக்கு ஒரு முறை வீட்டு வரியும், அரசு ஊழியர்களிடமிருந்து வருடத்திற்கு ஒரு முறை வீட்டு வரியும், இரண்டு முறை தொழில் வரியும் வசூல் செய்ய வேண்டும். அவ்வாறு பெறப்படும் வரி பணத்திற்கு ரசீதில் பணம் செலுத்துபவரின் கையொப்பம் பெற்றுக்கொண்டு அதில் ஊராட்சி செயலாளர் கையொப்பமிட்ட பின்னர் ஊராட்சி மன்ற தலைவரிடம் கையொப்பம் பெற்று ரசீது வழங்க வேண்டும். மேற்படி வசூல் செய்யப்பட்ட வரி பணத்தை ரொக்கப்புத்தகத்தில் வரவு செய்து ஊராட்சி மன்ற தலைவரிடம் கையொப்பம் பெறவேண்டும். பின்னர் அப்பணத்தை ஊராட்சியின் வங்கி கணக்கில் செலுத்திவிட்டு ஊராட்சி கணக்கு எண்-1ல் வரவு வைத்து ஊராட்சி மன்ற தலைவரிடம் கையொப்பம் பெறவேண்டும். இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், தில்லையேந்தல் ஊராட்சி செயலாளராக இருந்த எதிரி திரு.கே.பாலகிருஷ்ணன் என்பவர் கடந்த 2018-2019 ஆம் நிதியாண்டில் மேற்படி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பணிபுரிந்த அரசு ஊழியர்களிடமிருந்து முதலாம் அரையாண்டில் வசூல் செய்த தொழில் வரி ரூ.1,56,080/-க்கு ரசீதுகள் வழங்கப்பட்டு அதனை ஊராட்சியில் ரொக்க கணக்கு பதிவேட்டில் பதிவு செய்யாமலும் வரவு வைக்காமலும் வங்கியின் மூலம் அரசு கணக்கில் செலுத்தாமல் அரசை ஏமாற்றி நம்பிக்கை மோசடி செய்து அரசு பணத்தை அவரது சொந்த பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் கையாடல் செய்துள்ளார். மேலும் கடந்த 2018-2019ஆம் நிதியாண்டில் மேற்படி ஊராட்சியில் பணிபுரிந்த அரசு ஊழியர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட தொழில்வரி ரூ.1,06,575/-ல் ரூ.36,000/-வங்கியில் செலுத்தியதுபோக ரூ.70,575/- கையாடல் செய்துள்ளார். அதே நிதியாண்டில் மேற்படி ஊராட்சி

பொதுமக்களிடமிருந்து வசூல் செய்த வீட்டுவரி ரூ.1,24,798/–ல் ரூ.72,731/– வங்கியில் செலுத்தியது போக ரூ.52,067/– கையாடல் செய்துள்ளார். எதிரி மேற்படி நிதியாண்டில் அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் முறையே தொழில் வரி மற்றும் வீட்டுவரி ஆகமொத்தம் ரூ.2,78,722/–ஐ கையாடல் செய்து அரசுக்கு வரி இழப்பு ஏற்படுத்தியுள்ளார். இவ்வாறு மேற்படி வசூல் செய்த வரித்தொகையை அரசு கணக்கில் செலுத்தாமல் பொய்யான ஒரு ஆவணத்தை தயார் செய்திருப்பது தெரிந்தும் நம்பவைத்து மோசடி செய்துள்ளார். மேற்படி ஊராட்சி செயலாளரின் கட்டுப்பாட்டின்கீழ் வரிவசூல் செய்யும் பொறுப்பு இருந்த நிலையில் மேற்படி வசூல் செய்த அரசு வரிப்பணத்தை தன்னுடைய சுய லாபத்திற்காக கையாடல் செய்துள்ளார். மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம், 2018 சட்டப்பிரிவு 17(A) ன்படி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ந.க.எண்.M3/9585/2018, 26.08.2021 நாளிட்ட கடிதம் மூலம் அனுமதி வழங்கியுள்ளார்கள். எதிரி சுயலாபம் அடையும் நோக்கோடு அரசு பணத்தை கையாடல் செய்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்து அரசு பணியில் தனது கடமையை தவறியமைக்காக எதிரி மீது இராமநாதபுரம் ஊ.த.க.பிரிவு கு.எண்.1/2022 பிரிவு **13 (2) r/w 13 (1) (c)**, 1988 ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 சட்டப்பிரிவுகள் **13 (2) r/w 13 (1) (a)** மற்றும் 409, 465, 468, 471, 477(A) இதச ன்படி வழக்குப்பதிவு செய்யப்படுகிறது. ஒப்பம் திரு.M.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். முதல் தகவல் அறிக்கையின் அசலை முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிமன்றம், இராமநாதபுரம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

9/01/2022

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Ramanathapuram.